தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******
ஆணை எண் 104/ந/2022
நாள்.10.09.2022

திரு.C.K.V.கிருஷ்ணமூர்த்தி MC,
செங்கல்பட்டு. – முறையீட்டு மனுதாரர்.

ஆணையாளர்,
செங்கல்பட்டு நகராட்சி. – எதிர் மனுதாரர்.

செங்கல்பட்டு மாவட்டம், சுந்தரமூர்த்தி விநாயகர் கோவில் தெரு, கதவு எண்.21–A என்ற முகவரியில் வசிக்கும் திரு.C.K.V.கிருஷ்ணமூர்த்தி என்பவரின் 22.06.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 18.07.2022 அன்று பெறப்பட்டு 104/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

செங்கல்பட்டு மாவட்டம், சுந்தரமூர்த்தி விநாயகர் கோவில் தெரு, கதவு எண்.21–A என்ற முகவரியில் வசிக்கும் திரு.C.K.V.கிருஷ்ணமூர்த்தி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

“நான் இப்போது வார்டு – 2 ஜே.சி.கே நகரின் நகரமன்ற உறுப்பினர் ஆவேன். மேலும் கடந்த 1996 முதல் தற்போது வரை தொடர்ச்சியாக ஐந்து முறை நகரமன்ற உறுப்பினர் ஆவேன். மேலும் செங்கல்பட்டு நகரம் மற்றும் செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட 2வது வார்டில் ஜே.சி.கே. நகரில் அமைந்துள்ள முல்லை தெருவில், மழைநீர் கால்வாய் அமைக்கும் பணிக்கு 15–வது நிதிக்குழுவில் ஒப்பந்தம் கோரப்பட்டு, அந்த பணியை தனது அதிகார பலத்தால் திரு.C.வீரபாண்டியன் என்பவர் பெற்ற நிலையில், அவர் அந்த பணியை அவரது மகன் திரு.C.V.இளையராஜா அவர்கள் எடுத்து தரமற்ற முறையில் கட்டியதால் 20 நாட்களில் முற்றிலும் சரிந்து விழுந்தது. இது தொடர்பாக நேரில் சென்று ஆணையரிடம் புகார் தெரிவித்த பின்னரும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. விசாரித்ததில் இவர் டெண்டர் எடுத்ததில் பல குளறுபடிகள் நடந்துள்ளதாக தெரியவந்துள்ளது. இந்த மழைநீர் கால்வாய் இடிந்து விழுந்தது தொடர்பாக அங்கு வசிக்கும் மக்கள் கொந்தளிப்பின் காரணமாக ஊடகங்கள் அதனை படம்

பிடித்து வெளியிட்டுள்ளனர். இருப்பினும் அதிகாரிகளின் துணையோடு திரு.C.வீரபாண்டியன் இதனை மறைக்க முயல்கிறார்.

எனவே ஐயா அவர்கள் செங்கல்பட்டு நகரம் (ம) செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட 2வது வார்டில் ஜே.சி.கே. நகரில் அமைந்துள்ள முல்லை தெருவில், மழைநீர் கால்வாய் அமைக்கும் ஒப்பந்தம் கோரப்பட்டு அந்தப் பணியை திரு.C.வீரபாண்டியன் பெற்று அந்த பணியை அவரது மகன் திரு.C.V.இளையராஜா தரமற்ற முறையில் அவசர அவசரமாக கட்டியதன் காரணமாக 20 நாட்களுக்குள் இடிந்து விழுந்தது. மேலும் இதைப் பற்றி விசாரித்ததில், நடைபெற்ற முறைகேட்டிற்கு உடந்தையாக இருந்ததே செங்கல்பட்டு நகராட்சி நிர்வாக அதிகாரிகள் என தெரியவந்தது. எனவே தவறு செய்த அதிகாரிகள் மீது உரிய விசாரணை மேற்கொண்டு உடனடியாக சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறும், மேலும் திரு.C.வீரபாண்டியன் அவர்களின் ஒப்பந்த உரிமத்தை ரத்து செய்யுமாறும், இடிந்த அந்த மழைநீர் கால்வாயை புதியதாக சீரமைத்துக் கொடுக்குமாறும் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 26.07.2022 நாளிட்ட கடிதம் மூலம் செங்கல்பட்டு நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

செங்கல்பட்டு நகராட்சி ஆணையாளர் தனது 27.08.2022 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

" செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.2 ஜே.சி.கே நகர் முல்லைத் தெருவில் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணிக்கு 15–வது நிதிகுழு திட்டத்தின் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரியதில், குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த திரு.C.வீரபாண்டியன் என்பவருக்கு பணி உத்தரவு வழங்கி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இந்நிலையில் திரு.C.வீரபாண்டியன் ஒப்பந்ததாரர் அவர்களுக்கு திடீர் என உடல் நல குறைவு ஏற்பட்டதால் அன்னாரின் மகனான திரு.C.V.இளையராஜா என்பவரை மேற்பார்வை பணியில் மட்டும் அவர் தந்தையால் ஈடுபடுத்தப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டது.

திரு.C.K.V.கிருஷ்ணமூர்த்தி நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் புகாரில் குறிப்பிட்டுள்ள பழுதுகள் நீக்கம் செய்யப்பட்டு தற்பொழுது பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. மேற்படி பழுதுகள் நீக்கிய பணிக்காக தனியாக பில் தொகை ஏதும் நகராட்சியால் வழங்கப்படமாட்டாது. எனவே, இந்நிகழ்வில் நகராட்சிக்கு நிதி இழப்பு ஏதும் இல்லை. மேலும், இப்பணிக்காக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் முறைகேடுகள் ஏதும் நடைபெறவில்லை என இதன் மூலம் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும், செங்கல்பட்டு நகராட்சி ஆணையரும் 29.08.2022 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 24.08.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு.C.K.V.கிருஷ்ணமூர்த்தி, 29.08.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி பின்வருமாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

''செங்கல்பட்டு நகராட்சி 2வது வார்டில் ஜே.சி.கே. நகரில் அமைந்துள்ள முல்லைத் தெருவில் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தம் கோரப்பட்டு, அந்த பணி திரு.சி.வீரபாண்டியன் என்பவருக்கு வழங்கப்பட்ட நிலையில் அவரது மகன்

திரு.சி.வி.இளையராஜா என்பவர் மேற்கண்ட பணியை தரமற்ற முறையில் செய்து முடித்ததால், அவை 20 நாட்களில் முற்றிலும் சரிந்து விழுந்துவிட்டது. இது குறித்து அப்போதைய நகராட்சி ஆணையர், நகராட்சிப் பொறியாளர் ஆகியோருக்கு மனுக்கள் பலஅனுப்பியும் நடவடிக்கை ஏதும் நகராட்சியால் எடுக்கப்படவில்லை. இது தொடர்பாக கடந்த 22.06.2022 அன்று மாவட்ட ஆட்சியருக்கு மனு கொடுத்ததையடுத்து சுமார் இரண்டு மாதம் கழித்து ஆகஸ்ட் 2022ல் மேற்கண்ட பணியை புதிதாக செய்துள்ளனர். ஆரம்பத்திலேயே மேற்கண்ட கால்வாய் பணியை சரிவர மேற்பார்வை செய்யாமல் தவறுக்கு உடந்தையாக இருந்த நகராட்சி அலுவலர்கள் மீதும், சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் மீதும் தேவையான நடவடிக்கை எடுக்கும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான செங்கல்பட்டு நகராட்சி ஆணையாளராக பணிபுரியும் திருமதி.த.மல்லிகா மற்றும் நகராட்சிப் பொறியாளராக பணிபுரியும் திரு.ஆர்.நாகராஜன் ஆகியோர் 29.08.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்கள்:

''நகராட்சி ஆணையரான நானும், நகராட்சிப் பொறியாளரும் இரண்டு மாதங்களுக்கு முன்புதான் செங்கல்பட்டு நகராட்சியில் பணியில் சேர்ந்தோம். மனுதாரர் குறிப்பிட்டுள்ள செங்கல்பட்டு நகராட்சி 2வது வார்டில் ஜே.சி.கே நகரில் அமைந்துள்ள முல்லைத் தெருவில் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தம் கோரப்பட்டு, அந்த பணி திரு.சி.வீரபாண்டியன் என்பவருக்கு வழங்கப்பட்டு அவரது மகன் திரு. இளையராஜா என்பவரால் 20.05.2022 அன்று பணி முடிக்கப்பட்டது. நகர்மன்ற உறுப்பினர் மற்றும் மனுதாரரான திரு.கிருஷ்ணமூர்த்தி என்பவரிடமிருந்து மேற்கண்ட பணி தொடர்பாக 22.06.2022 நாளிட்ட புகார் மனு செங்கல்பட்டு நகராட்சியில் பெறப்பட்டதைத் தொடர்ந்து மேற்கண்ட கால்வாய்ப் பணிகள் பழுது நீக்கம் செய்யப்பட்டு தற்போது நல்ல நிலையில் பயன்பாட்டில் உள்ளது என்கின்ற விவரத்தையும், மேற்கண்ட பணிகளுக்கான பில் தொகை (ரூ 5.10 லட்சம்) ஒப்பந்ததாரருக்கு இன்னும் அளிக்கப்படவில்லை என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்நேர்வு தொடர்பான புகைப்படங்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறோம். மேலும், நகராட்சி ஆணையரின் 27.08.2022 நாளிட்ட இம்முறைமன்றத்தில் எங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்'' என தெரிவித்துள்ளார்கள்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், செங்கல்பட்டு நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கை, வாக்குமூலம் மற்றும் நகராட்சி பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் செங்கல்பட்டு நகராட்சி, 2வது வார்டில் மழைநீர் கால்வாயினை முறைகேடாக ஒப்பந்ததாரரின் மகன் மூலம் அமைக்கப்பட்டதால், கட்டிய 20 நாட்களுக்குள் இடிந்து விழுந்துள்ளதை புகாராக தெரிவித்துள்ளார்.

செங்கல்பட்டு நகராட்சி 2வது வார்டு ஜே.சி.கே. நகர், முல்லைத் தெருவில் 15வது நிதிக்குழுத் திட்டத்தின்கீழ் மழைநீர் கால்வாயினை அமைப்பதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்பந்ததாரர் திரு. C. வீரபாண்டியன் என்பவருக்கு மழைநீர்கால்வாய் அமைக்கும் பணியினை ரூ. 5.10 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கியதில், அப்பணியை அவரது மகன் திரு. C.V. இளையராஜா என்பவர் மூலம் மேற்கொள்ளப்பட்டு தரமற்ற முறையில் கட்டியதால், கட்டிய 20 நாட்களுக்குள்

இடிந்து விழுந்துள்ளதை, ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது. இதனை நகராட்சி ஆணையர் அளித்த அறிக்கை மற்றும் வாக்குமூலம் மூலமாக அறிய முடிகிறது.

மேற்கண்ட தரமற்ற கால்வாய் கட்டுமானப் பணியை ஒப்பந்ததாரர் திரு.C.வீரபாண்டியன் என்பவருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் அவரது மகனின் மேற்பார்வையில் பணி மேற்கொள்ளப்பட்டது என்கிற ஆணையரின் கூற்றும் கட்டுமானப் பணி தரமான நிலையில் கட்டப்பட்டு வருகிறதா என்பதை நகராட்சி அலுவலர்கள் கண்காணிக்க தவறி உள்ளதையும் இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது.

ஒப்பந்ததாரர் பணியினை மேற்கொண்டிருக்கும் சமயத்திலேயே நகராட்சி களப்பணியாளர்கள் பணியினை அடிக்கடி மேற்பார்வை செய்திருந்தால், ஒப்பந்ததாரரின் மகன் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டதையும் தரமற்ற முறையில் கட்டியதால் இடிந்து விழுந்த நிகழ்வையும் தடுத்திருக்க முடியும். இவ்வாறு பணியினை ஆய்வு செய்யாத நடவடிக்கையானது நகராட்சி அலுவலர்களின் அலட்சிய போக்கையும், மெத்தனத்தையும் தெள்ளத் தெரிவாகக் காட்டுகிறது. மனுதாரர் இடிந்து விழுந்த கால்வாய் குறித்து புகார் தெரிவித்த உடனே நடவடிக்கை எடுக்கப்படாமல் இரண்டு மாதங்கள் கழித்து காலதாமதமாக நடவடிக்கை எடுத்த நகராட்சியின் செயலினை இம்முறைமன்ற நடுவம் கடுமையாக கண்டிக்கிறது. இதற்கு காரணமான முன்னாள் நகராட்சி ஆணையாளர், பொறியாளர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் களப்பணியாளர்கள் மீதும் துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கையினை எடுக்கும்படி நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. முன்னாள் ஆணையரும், நகராட்சி பொறியாளரும் இதில் எவ்வித அக்கறை காட்டாமல், நடவடிக்கை எடுக்காமல் இருந்தது அவர்களின் ஒழுங்கீனத்தையும் நேர்மையற்ற செயல்பாட்டையும் காட்டுகிறது.

மேலும் ஒப்பந்ததாரர் திரு C. வீரபாண்டியன் என்பவர் மூலமாக இடிந்து விழுந்த கால்வாயினை சீரமைத்து, தற்போது பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ள நிலையில் கால்வாயினை சீரமைத்தற்காக கூடுதல் தொகை ஏதும் ஒப்பளிப்பு செய்யப்படாமல் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்ட ரூ 5.10 இலட்சம் மட்டுமே நகராட்சியால் ஒப்பளிப்பு செய்யப்பட வேண்டும் எனவும் இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது.

2022 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 10–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.C.K.V.கிருஷ்ணமூர்த்தி
21– A, சுந்தரமூர்த்தி விநாயகர் கோவில் தெரு,
செங்கல்பட்டு.

2) ஆணையாளர், செங்கல்பட்டு நகராட்சி,
செங்கல்பட்டு மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

12/9/22
செயலாளர்

12/09/22